அனுப்புநர் பெறுநர்

| | |
|---|---|
| முனைவர். திரு. வி.சி. இராமேஸ்வரமுருகன் | மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர், |
| இயக்குநர், | அனைத்து மாவட்டங்கள். |
| பள்ளி சாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி | |
| இயக்ககம் | |
| சென்னை–06 | |

ந.க எண். 743 /ஆ3/2020, நாள்: 28.10.2020

பொருள் பள்ளி சாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம், சென்னை–06 – **"கற்போம் எழுதுவோம் இயக்கம்" – புதிய வயது வந்தோர் கல்வித் திட்டம்** செயல்படுத்துதல் – 05.11.2020 பிற்பகல் அன்று காணொளி வாயிலான ஆய்வுக்கூட்டம் நடத்துதல் – விவரங்கள் கோருதல்– சார்பு

பார்வை
1. மத்திய அரசு பள்ளிக்கல்வித்துறை கடித எண். No9-3/2020-NLM.1, நாள் : 08.05.2020,30.09.2020,14.10.2020
2. திட்ட ஒப்புதல் வாரியக் கூட்டம் (Project Approval Board(PAB) , நாள் : 21.10.2020
3. மாநில திட்ட இயக்குநர் மற்றும் உறுப்பினர் செயலர், தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற காணொளிக் கூட்டம் நாள் 23.10.2020.

*****

பார்வையில் காணும் மத்திய அரசின் கடிதங்கள் மற்றும் 21.10.2020 அன்று நடைபெற்ற திட்ட ஒப்புதல் வாரியக் கூட்ட (Project Approval Board(PAB)) முடிவுகளின் படி, தமிழகத்தில், 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டு, 15 வயதுக்குமேற்பட்ட முற்றிலும் எழுதவும், படிக்கவும் தெரியாத கல்லாதோருக்கு, அடிப்படை எழுத்தறிவை வழங்கிடும் நோக்கில், தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தின் கீழ், பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககத்தின் மூலம் **கற்போம் எழுதுவோம் இயக்கம் என்கிற புதிய வயது வந்தோர் கல்வித் திட்டத்தை,** மத்திய மற்றும் மாநில அரசுகளின் 60:40 என்கிற நிதிப்பங்களிப்பின் கீழ், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட திட்டமிடப்பட்டு இது சார்ந்த வழிகாட்டு நெறிமுறைகள் பார்வை–2–ல் காணும் கூட்டத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

தற்போது இதன் தொடர்ச்சியாக, முன்குறிப்பிட்டுள்ளபடி, ஒவ்வொரு மாவட்ட அளவில் இத்திட்டம் சார்ந்து கீழ்காணும் விவரங்கள் மீதான ஆய்வுக்கூட்டம் காணொளி வாயிலாக நடைபெற உள்ளது.

1. கண்டறியப்பட்டுள்ள 15 வயதுக்குமேற்பட்ட முற்றிலும் எழுதவும், படிக்கவும் தெரியாத கற்போர்களின் எண்ணிக்கை
2. 20 கற்போர்களுக்கு ஒரு தன்னார்வல ஆசிரியர் என்கிற அடிப்படையில் கண்டறியப்பட்டடுள்ள தன்னார்வல ஆசிரியர்களின் எண்ணிக்கை
3. தெரிவு செய்யப்பட்ட கற்போர் கல்வியறிவு மையங்கள் எண்ணிக்கை.

எனவே, இவ்வாய்வு கூட்டத்திற்கு முன்குறிப்பிடப்பட்டுள்ளபடி, கண்டறியப்பட்டுள்ள கற்போர் எண்ணிக்கை, தன்னார்வல ஆசிரியர்களின் எண்ணிக்கை, கற்போர் மையம் ஆகிய விவரங்களை வருகின்ற 04.11.2020 அன்று வட்டாரக் கல்வி அலுவலர்/வட்டார வள மைய பொறுப்பு மேற்பார்வையாளர் தலைமையில் அனைத்து தலைமை ஆசிரியர்களுக்கான கூட்டம் நடத்தப்பட்டு மேற்குறிப்பிடப்பட்ட விவரங்களை அன்றே பெற்று சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலருக்கு அனுப்புதல் வேண்டும்.

அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்/வட்டார வள மைய பொறுப்பு மேற்பார்வையாளர்களுக்கான கூட்டம் 05.11.2020 முற்பகல் முதன்மைக் கல்வி அலுவலர் தலைமையில் நடத்தப்பட்டு வட்டாரக் கல்வி அலுவலர்/வட்டார வள மைய பொறுப்பு மேற்பார்வையாளர்களிடமிருந்து பெறப்பட்ட விவரங்களை வருவாய் மாவட்ட அளவில் உரிய படிவத்தில் தொகுத்து வைத்து தங்களின் மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ள GOOGLE Spread Sheet link- ன் மூலம் தங்கள் மாவட்டத்தின் ஒவ்வொரு ஒன்றிய அளவிலான விவரங்களை இவ்வியக்ககத்திற்கு ONLINE வழியாக அன்றே சமர்பித்திட அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், 05.11.2020 பிற்பகல் மேற்காணும் செயல்பாடுகள் சார்ந்து மாநில திட்ட இயக்குநர் மற்றும் இயக்குநர், பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம் ஆகியோரின் தலைமையில் காணொளி வாயிலாக நடைபெற உள்ள ஆய்வுக் கூட்டத்தில், முன்கோரப்பட்டுள்ள அனைத்து விவரங்களுடன் தவறாது கலந்து கொள்ள அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இத்திட்டம் சார்ந்த விவரங்கள் தொடர்பான கூடுதல் தகவல் பெறும் பொருட்டு இவ்வியக்க தொழில் நுட்ப அலுவலர் மற்றும் களப்பணி அலுவலர் ஆகியோரின் கைப்பேசி எண்ணிற்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கைப்பேசி எண்: 1. திரு.இரா.ஜெயராமன், தொழில் நுட்ப அலுவலர்–9087857014
2. திரு.எஸ்.செல்வகுமார், களப்பணி அலுவலர் – 7539950163

29/10/20

இயக்குநர்
பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர்
கல்வி இயக்ககம், சென்னை–06

நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது

29/x/2020

1. அரசு முதன்மைச் செயலர்,
   பள்ளிக்கல்வித்துறை,
   தலைமச்செயலகம், சென்னை–09.
2. மாநிலத் திட்ட இயக்குநர் மற்றும் உறுப்பினர் செயலர்
   ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்டம் மற்றும் தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு
   ஆணையம், சென்னை–06.